# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| HMOP.No. 53/2023 | Date : 27.03.2025 | PW 1 |
|---|---|---|
| Name: கடவுள்துரை | த/பெ. மாது | |

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு எந்த தேதியில் திருமணம் நடைபெற்றது என்றால் 22.10.2018 ந்தேதி நடைபெற்றது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் எதிர்மனுதாரர் கல்லூரி படிப்பை பாதியில் நிறுத்திவிட்டதாகவும் இரண்டு வருடம் படிக்க வேண்டும் என்றும் படிப்பு முடிந்தால்தான் நமக்குள் திருமண உறவு ஏற்படும் என்று சொன்னதாக குறிப்பிட்டுள்ளேன் என்றும் எங்களுக்குள் திருமணமாகி இரண்டு வருடங்களுக்கு தாம்பத்ய உறவு ஏற்படவில்லையா என்றால் ஆறு மாதங்கள் தாம்பத்ய உறவு ஏற்படவில்லை. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான் சொல்லிதான் வழக்கறிஞர் தயார் செய்தாரா என்றால் நான் சொல்லிதான் வழக்கறிஞர் தயார் செய்தார். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் 6 ஆம் பத்தியில் எதிர்மனுதாரர் குழந்தை பிறப்பதற்காக அவரது வீட்டிற்கு சென்றபோது குழந்தையை சுமக்கிறோம் என்று இல்லாமல் தன் இஷ்டம்போல் நடந்து வந்து சில நாட்களில் அதை அவராகவே கலைத்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றும் அதுதான் எங்களது முதல் குழந்தையா என்றால் ஆமாம். எதிர்மனுதாரர் குழந்தை பிறப்பிற்காக கருவுற்று எத்தனை மாதங்களில் சென்றார் என்றால் மூன்று மாதத்தில் சென்றார். ஜீவனாம்ச வழக்கில் எனது விசாரணையின்போது எதிர்மனுதாரரை குழந்தை பிறப்பிற்காக 7 வது மாதத்தில் அனுப்பியதாக சாட்சியமளித்துள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு நான் சொல்லவில்லை. முதல் கரு உருவாகி கலைக்கப்பட்டு எத்தனை மாதங்கள் கழித்து 2 வது கரு உருவானது என்றால் மூன்று மாதங்கள் கழித்து உருவானது. மேற்படி 2 வது கருவை எத்தனை மாதங்களில் கலைத்தார் என்றால் மூன்றரை மாதங்களில் கலைத்தார். எதிர்மனுதாரர் அவ்வாறு கரு கலைத்தது குறித்து ஆதாரம் ஏதாவது நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. ஜீவனாம்ச வழக்கில் 7 மாதங்கள் கழித்து கரு கலைத்ததாக நான் சாட்சியமளித்துவிட்டு தற்போது இந்த வழக்கில் மூன்று மாதங்களில் கரு கலைத்ததாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதன் பிறகு 6 மாதங்கள் கழித்து மூன்றாவது கரு உருவானது. திருமணமாகி இரண்டு வருடங்கள் கழித்து மேற்படி 3 வது கரு உருவானது. எனக்கு திருமணம் 22.10.2018 ந்தேதி நடந்தது. குழந்தை 21.03.2021 ம் தேதி பிறந்தது. எதிர்மனுதாரருக்கு உருவான முதல் கருவே மேற்படி தேதியில் பிறந்த குழந்தை தான் என்றும் எதிர்மனுதாரர் இரண்டு முறை கருவுற்று கலைத்துவிட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் திருமணத்திற்கு முன்பு பூபதி என்பவருடன் ஓடிவிட்டதாகவும் அதன்பிறகு அவரை பிரித்து அழைத்து வந்து எனக்கு திருமணம் செய்து வைத்ததாக எதிர்மனுதாரர் முதலிரவன்று என்னிடம் சொன்னார். அதற்கு ஆதாரம் ஏதாவது நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் ஒப்படைக்கவில்லை. எதிர்மனுதாரரிடமிருந்து விவாகரத்து பெறும் நோக்கத்தோடு எதிர்மனுதாரர் வேறு ஒருவருடன் ஓடிவிட்டதாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும் எதிர்மனுதாரரும்

எத்தனை வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வருகிறோம் என்றால் சுமார் 4 வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வருகிறோம். எதிர்மனுதாரர் மற்றும் குழந்தை பெயரில் சொத்து எழுதி வைத்தால்தான் என்னுடன் வாழ அனுப்புவேன் என்று எதிர்மனுதாரரின் தகப்பனார் சொன்னதாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்றும் அவ்வாறு சொத்து ஏதாவது எழுதி வைக்க நான் ஏற்பாடு செய்தேனா என்றால் ஏற்பாடு செய்யவில்லை. ஆனால் எனது சொத்துக்கள் முழுவதும் எதிர்மனுதாரருக்கு தான் என்று சொன்னேன். 4 வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வரும் நிலையில் எதிர்மனுதாரருக்கும் எனது குழந்தைக்கும் ஜீவனாம்சம் ஏதாவது கொடுத்துள்ளேனா என்றால் கொடுக்கவில்லை. எதிர்மனுதாரர் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் ஜீவனாம்ச கோரி M.C. 26/2022 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு அனுமதிக்கப்பட்டு அதில் எதிர்மனுதாரருக்கும் குழந்தைக்கும் சேர்த்து மாதம் ரூ. 7,000/- ஜீவனாம்சம் கொடுக்கவேண்டும் என்று உத்தரவானது என்றால் சரிதான். அதை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளேன். தீர்ப்பாகி ஒரு வருடம் இரண்டு மாதங்கள் ஆகியுள்ள நிலையில் எனது குழந்தையின் பராமரிப்பிற்காக ஜீவனாம்ச தொகை ஏதாவது செலுத்தியுள்ளேனா என்றால் இல்லை. நான் கூலிவேலைக்கும் ஏரி வேலைக்கும் செல்கிறேன். நான் பல வருடங்களாக மேற்படி வேலைக்கு தான் செல்கிறேன். இதே நீதிமன்றத்தில் எனது மனைவியுடன் சேர்ந்து வாழவேண்டும் என்று மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் அனுப்பிய சட்ட அறிவிப்பிலும், மேற்படி மனைவியுடன் சேர்ந்து வாழவேண்டும் என்ற மனுவிலும் நான் JSW நிறுவனத்தில் வேலை பார்ப்பதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரருக்கு ஜீவனாம்சம் கொடுப்பதை தவிர்க்கும் நோக்கத்தோடு நான் ஏரி வேலைக்கு செல்வதாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு எதிர்மனுதாரருடன்சேர்ந்து வாழ விருப்பமா அல்லது விவாகரத்து பெற விருப்பமா என்றால் சேர்ந்து வாழத்தான் விருப்பம். விவாகரத்து பெற விருப்பமில்லை. அதனால் இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ மறுக்கிறார்.

**மறுவிசாரணை - இல்லை**

ஒம்/-கடவுள்துரை

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-எல்.கமலகண்ணன்,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.